குழந்தைகளுக்கு சமச்சீர் உணவு, நுண்ணூட்டச்சத்து நிறைந்த

# உணவுகள் - புரதச் சத்து - ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை மேம்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி!

**புதுடெல்லி. ஆக.9-**

**குழந்தைகளுக்கு சமச்சீர் உணவு, நுண்ணூட்டச் சத்து நிறைந்த உணவுகள், புரதச் சத்து மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.**

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி, உடல் நலம் மற்றும் அறிவாற்றல் மேம்பாட்டிற்கு சத்தான உணவுகள் எளிதில் கிடைப்பதையும், அவை அனைவருக்கும் அணுகக் கூடியதாகவும் மலிவானதாகவும் இருப்பதையும் உறுதி செய்வது அவசியம். இது தொடர்பாக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து டி.எம்.கதிர் ஆனந்த் எழுப்பிய கேள்வி முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இதற்கு, ஒன்றிய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் திருமதி சாவித்ரி தாக்கூர் அளித்த பதிலில், 'மிஷன் சக்தி வாய்ந்த அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0' (Mission Saksham Anganwadi and Poshan 2.0) திட்டத்தின் கீழ் குழந்தைகள் உள்ளிட்ட அனைத்து பயனாளிகளுக்கும் கூடுதல் ஊட்டச்சத்து வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 14 முதல் 18 வயது வரையிலான வளர் இளம் பெண்களுக்கு வீட்டிற்கு எடுத்துச் செல்லும் உணவு (THR), காலை சிற்றுண்டி மற்றும் சூடான சமைத்த உணவு ஆகிய வடிவங்களில் கூடுதல் ஊட்டச்சத்து வழங்கப்படுகிறது.



**சமச்சீர் உணவு முறைக்கு முக்கியத்துவம்!**

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013ன் அட்டவணைIIல் குறிப்பிடப்பட்டுள்ள ஊட்டச்சத்து விதிமுறைகளின் அடிப்படையில் இந்த உணவுகள் வழங்கப்படுகின்றன.

2023 ஜனவரியில் திருத்தப்பட்ட புதிய ஊட்டச்சத்து விதிமுறைகள், கலோரி அளவை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட பழைய முறையைவிட, உணவின் அளவு மற்றும் தரம் இரண்டையும் உள்ளடக்கிய சமச்சீர் உணவு முறைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. இதில் தரமான புரதம், ஆரோக்கியமான கொழுப்புகள் மற்றும் கால்சியம், துத்தநாகம், இரும்புச் சத்து, ஃபோலேட், வைட்டமின் A, B6 மற்றும் B12 உள்ளிட்ட நுண்ணூட்ட ச்சத்துகள் இடம் பெறுகின்றன.

மேலும், கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு கொண்ட (SAM) 6 மாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு கூடுதல் ஊட்டச்சத்து உணவு வழங்கப்படுகிறது.

கூடுதல் ஊட்டச்சத்து உணவின் தரம், பல்வகைத் தன்மை மற்றும் குழந்தைகளின் ஏற்றுக்கொள்ளும் தன்மையை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு விரிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி வழங்குவதுடன், குழந்தைகளின் வயதுக்கு ஏற்ற துணை உணவு முறைகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

**உப்பு - சர்க்கரையின் பயன்பாட்டை குறைப்பதற்கான விழிப்புணர்வு!**

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் - தேசிய ஊட்டச்சத்து நிறுவனமான ICMRNIN வெளியிட்டுள்ள இந்தியர்களுக்கான உணவு வழிகாட்டுதல்கள் - 2024க்கு ஏற்ப, அன்றாட உணவில் சமையல் எண்ணெய், உப்பு மற்றும் சர்க்கரையின் பயன்பாட்டைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், ICMRNIN, வேளாண் பல்கலைக்கழகங்கள், உள்நாட்டு அறிவியல் கல்லூரிகள் உள்ளிட்ட ஊட்டச்சத்து நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆலோசனையைப் பெற்று, உள்ளூர் உணவுப் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ற வகையில் ஊட்டச்சத்து உணவுகளுக்கான சமையல் முறைகளை உருவாக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன.

உள்ளூர் உணவுப் பழக்கங்கள், கலாச்சார விருப்பங்கள் மற்றும் கிடைக்கக் கூடிய பாரம்பரிய உணவுப் பொருட்களின் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உணவு பட்டியல்கள் மற்றும் சமையல் முறைகளைத் தயாரிப்பதில் முழு நெகிழ்வுத்தன்மையும் வழங்கப்பட்டுள்ளது. சிறுதானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், கொட்டைகள் உள்ளிட்ட உள்ளூரில் கிடைக்கும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் இதில் இடம் பெறுகின்றன.

மேலும், 'போஷன் 2.0' திட்டத்தின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாக சமூகப் பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நல்ல ஊட்டச்சத்து பழக்கங்களை உருவாக்குவதற்கு தொடர்ச்சி யான விழிப்புணர்வும், மக்களின் நடத்தை மாற்றத்திற்கான முயற்சிகளும் அவசியம் என்பதன் அடிப்படையில், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 'ஜன் அந்தோலன்' நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

போஷன் மாஹ் மற்றும் போஷன் பக்வாடா ஆகிய காலகட்டங்களில் தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. 2018 முதல் 16 கட்டங்களாக நடைபெற்ற 'ஜன் அந்தோலன்' இயக்கங்களின் மூலம் இது வரை 150 கோடிக்கும் அதிகமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும், ஊட்டச்சத்து தொடர்பான நடைமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் சமூக அடிப்படையிலான நிகழ்ச்சிகள் (Community Based Events) முக்கிய பங்கு வகித்து வருகின்றன. ஒவ்வொரு அங்கன்வாடி பணியாளரும் மாதத்திற்கு இரண்டு சமூக அடிப்படையிலான நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 2022 ஏப்ரல் முதல் 2026 ஜூன் வரை சுமார் 10.5 கோடி சமூக அடிப்படையிலான நிகழ்ச்சிகள் போஷன் டிராக்கரில் பதிவாகியுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

# வரலாற்றுத் தலைவனுக்கு நினைவு நாள்!



**சாதி மதங்களைக் கடந்து,**
**சனாதான எதிர்ப்போடு,**
**ஏழை, எளியோரின்**
**வாழ்வின் உயர்வுக்கு**
**சமூக நீதிப் பார்வையோடு,**
**வழிகாட்டிய**
**வரலாற்று**
**தலைவனுக்கு**
**நினைவு நாள்,**

**பெரியார் வாழ்த்திய**
**அறிவாளிகளில்**
**முன் வரிசையில் ஒரு**
**அறிவாளி**
**கலைஞர் என்ற**
**தலைவருக்கு நினைவு நாள்,**

**தன்னை வெல்வான்,**
**தரணியை வெல்வான்**
**என்றிருந்த**
**அண்ணாவின்**
**தம்பிக்கு நினைவு நாள்,**

**அன்று**
**சங்கத்தமிழ்,**
**இன்று**
**கலைஞர் தமிழ்,**
**எனப் போற்றிய**
**இனமான பேராசிரியரின்**
**கலைஞருக்கு**
**நினைவு நாள்,**

**மண்டல் கமிஷன்**
**நட்பின் இலக்கணம்,**
**வி.பி.சிங்கின்**
**அன்பு அண்ணன்**
**கலைஞருக்கு நினைவு நாள்,**

**முரசொலி மாறனின்**
**உயிரனைய ஆசான்**
**கலைஞருக்கு**
**நினைவு நாள்,**

**ஸ்டாலின்**
**என்றால் உழைப்பு,**
**உழைப்பு..**
**உழைப்பை ஈன்ற உன்னத**
**தலைவர் கலைஞருக்கு**
**நினைவு நாள்,**

**பகுத்தறிவு பள்ளி நடத்தி**
**சுயமரியாதை**
**கற்றுத் தந்த**
**தலைவர் கலைஞருக்கு**
**நினைவு நாள்,**

**கல்விக்கு**
**பள்ளி, கல்லூரிகள் தந்து,**
**படிக்க முன்னுரிமை,**
**இட ஒதுக்கீடு, பெண்ணுரிமை,**
**சமத்துவபுரம் தந்த**
**கலைஞருக்கு நினைவு நாள்,**

**கலைஞர் காப்பீட்டு திட்டம்,**
**கண்ணொளி திட்டம்**
**தந்த,**
**கலைஞருக்கு நினைவு நாள்,**

**உலகம் மெச்சும்,**
**இலக்கியம் படைத்து,**
**வான் உயர நூலகம் தந்த**
**கலைஞருக்கு நினைவு நாள்,**

**நெஞ்சம் நிறைந்த**
**தலைவர் கலைஞருக்கு,**
**சமூகநீதி காத்த தலைவருக்கு**
**என்றுமே**
**நினைவு நாள்.**



இணை இயக்குநர் (ஓய்வு)
நகராட்சி நிர்வாகத்துறை
**த.சௌந்தரராஜன்,**
திருமுல்லைவாயில்.

முத்தமிழறிஞர் கலைஞரின் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

# செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில் அமைதி ஊர்வலம் - படத்திற்கு மரியாதை!

## செஞ்சி மஸ்தான் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

செஞ்சி ஆக 9-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்ட மன்றத் தொகுதி செஞ்சிகிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு திமுகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்தலைமையில்அப்பம்பட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்பும் வடக்கு மாவட்டசெயலாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் அமைதி ஊர்வலமாக சென்று அப்பம்பட்டு பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு பிரெட்உள்ளிட்ட உதவிகளை வழங்கினார்.

இதில்மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், துணைச் சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய அவைத் தலைவர்கள் ஆறுமுகம், வாசு, ஒன்றிய பொருளாளர் இக்பால், ஒன்றிய துணை செயலாளர்கள் குமார், மதியழகன், செல்வமணி, தாட்சயாணி, மாவட்ட பிரதிநிதிகள்

அனையேரி ரவி, அய்யாதுரை, கோடீஸ்வரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா, முன்னாள் கவுன்சிலர்கள் ரேவதி கணேசன், மாத்தூர் தாஸ், ஏ.என்.ஜி.சரவணன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் பழனி, பாலகிருஷ்ணன், குப்பன், லியாகத் அலி, கோணை ராஜா, முனுசாமி,

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பழனி, துணை அமைப்பாளர் செஞ்சி பழனி, ஊராட்சி நிர்வாகிகள் காந்தி, தாஜுதின், வீரப்பன், குப்பன் உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் தி.மு.க. நிர்வாகிகள் ஆகியோர் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பின்தங்கிய மற்றும் கிராமப்புற மாவட்டங்களில்

# டிஜிட்டல் இடைவெளியைப் போக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள சிறப்பு நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – ஆ.மணி கேள்வி

புதுடெல்லி, ஆக. 9 -

பின்தங்கிய மற்றும் கிராமப்புற மாவட்டங்களில் நிலவும் டிஜிட்டல் இடைவெளியைப் போக்கும் வகையில்,குறிப்பாக தமிழ் நாட்டின் தருமபுரி மாவட்டத்தில், பிராட்பேண்ட் இணைய இணைப்பு விரிவாக்கம், டிஜிட்டல் உள் கட்டமைப்பு மற்றும் பொதுமக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் சேவைகளை மேம்படுத்துவதற்காக ஒன்றிய அரசு ஏதேனும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன?



கடந்த மூன்று ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் டிஜிட்டல் இணைப்பு, ஃபைபர் உள்கட்டமைப்பு மற்றும் கிராமப்புற டிஜிட்டல் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்துதல், பொது சேவை மையங்களை (CSC) வலுப்படுத்துதல், மின்னணு ஆளுமைச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை செயல்படுத்தியுள்ளதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் அதிவேக இணைய இணைப்பு, கடைசி நிலை (LastMile) டிஜிட்டல் உள் கட்டமைப்பு மற்றும் பொதுமக்களின் வீடுகளுக்கே டிஜிட்டல் அரசு சேவைகளை வழங்கும் முறையை மேம்படுத்துவதற்காக கூடுதல் திட்டங்கள் ஏதேனும் முன்மொழியப்பட்டுள்ளனவா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன? என்று மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதாவிடம் தருமபுரி எம்.பி.ஆ.மணி கேள்வி எழுப்பியுள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோ. செங்குட்டுவன்

### ஆகஸ்ட் 9 (1996)



**பள்ளிப்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையினால் கவரப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**சென்னை மாவட்டக் கழக துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மாநகராட்சி மன்றத்தை கழகம் கைப்பற்றியபோது, தலைவர் கலைஞர் அவர்களுக்கு துணையாக இருந்து உழைத்தவர். அதற்காக அறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர்.**

**சென்னை மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு 1959ல் நடைபெற்றபோது, அம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்.**

**கறுப்புக் கொடி, இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பண்ருட்டி நகரக் கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள் அமைதி பேரணி!

## க.இராஜேந்திரன் தலைமை! டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலை !

கடலூர், ஆக.9-

பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பண்ருட்டி நகர கழக அலுவலகத்தில் இருந்து பண்ருட்டி நகர மன்ற தலைவர் ,நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில்,

கடலூர் மேற்கு மாவட்ட கழக தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில் அமைதிப் பேரணியாக புறப்பட்டு நான்கு முனை சந்திப்பில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்கள் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கதிர்காமன், நகர அவை தலைவர் ஆர்.ராஜா, நகர பொருளாளர் ஆர்.கே.ராமலிங்கம், நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன், மாவட்ட பிரதிநிதி ஆர்.டி.ஆர். பிரபு ,

மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் பரணிச்சந்தர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் இராம்குமார், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் அ.ம.சங்கர், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் நாராயணன் ,நகர துணை செயலாளர்கள் சீனிவாசன், சசிகுமார், நகர வர்த்தக அணி அமைப்பாளர் சேகர், நகர விவசாய அணி அமைப்பாளர் விஸ்வநாதன், நகர தொழிலாளர் அணி அமைப்பாளர் ஜாகிர் உசேன், நகர இளைஞரணி அமைப்பாளர் சம்பத்,நகர மாணவரணி பார்த்திபன் மற்றும் வார்டு செயலாளர்கள், வட்ட பிரதிநிதிகள் கழகத்தின் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு மௌன அஞ்சலி செலுத்தினர்.



சிதம்பரத்தில் சின்ன செட்டி தெரு வார்டு எண் 16 திமுக முன்னாள் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜேம்ஸ் விஜயராகவன் தலைமையில் 1000 பேருக்கு உணவு வழங்கப்பட்டது. பால சுப்பிரமணியன், இளங்கோவன் ,கிருஷ்ணமூர்த்தி, அப்பு சந்திரசேகரன், ஏ .ஆர் .சி. மணிகண்டன், ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.